(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.73/2014 |
| Deposition Of Witness for | : | PW5 |
| Name | : | **Tr.Vazhavanthan** |
| Father's Name | : | Tr.Manikkam |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7th **February 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்(TANGEDCO)-ல் சிவகங்கை மாவட்டம், கீழடி பிரிவு அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009-ம் ஆண்டு

கீழடி பிரிவு அலுவலகத்தில் கள உதவியாளராக பணிபுரிந்து வந்தேன்.

2. கடந்த 09.11.2011–ம் தேதி கீழடி பிரிவு அலுவலகத்தில் இரவு சுமார் 10.30 மணிக்கு மேல் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து ஆய்வாளர் மற்றும் போலிசார் என்று சொல்லி எங்கள் அலுவலகத்திற்கு வந்தார்கள். அப்போது இளநிலை மின்பொறியாளர் திரு.மீனாட்சிசுந்தரம் என்பவரையும் அழைத்து வந்தனர். என்னிடம் காட்டப்படும் மகஜரில் இரண்டு பக்கங்களிலும் கீழே உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

3. எதிரி சம்பந்தப்பட்ட 07 ஆவணங்களையும் காவல் ஆய்வாளர் கேட்டதற்கிணங்க நான்தான் எடுத்துக் கொடுத்தேன். அதற்கு அத்தாட்சியாகத்தான் என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள இரண்டு பக்கங்களிலும் கீழே நான் கையொப்பம் செய்துள்ளேன். என்னுடன் அத்தாட்சி மகஜரில் வேறு துறையைச் சேர்ந்து இரண்டு நபர்கள் வந்து கையொப்பம் செய்தனர். அத்தாட்சி மகஜரில் 2 வது பக்கத்தில் நகலைப் பெற்றுக் கொண்டேன் என்ற இடத்திலும் கையொப்பம் செய்தேன். **அத்தாட்சி மகஜரில் முதல் பக்கத்தில் கீழ் பகுதியில் 3 வதாக உள்ள கையொப்பம், 2 வது பக்கத்தில் கீழ் பகுதியில் முதலில் உள்ள கையொப்பம்**

**மற்றும் 2 வது பக்கத்தில் நகல் பெற்றுக்கொண்டேன் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் ஆகியவை அ.த.சா.ஆ.21 (வரிசை)**ஆகும்.

4. ஏழு ஆவணங்கள் நான் காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். எங்கள் அலுவலக வருகைப் பதிவேடு–2011 –ஒன்று, அலுவலக பணி ஒதுக்கீடு பதிவேடு (Job Allocation Register) – ஒன்று, அலுவலக விண்ணப்ப பதிவேடு (Application Register) – ஒன்று, Work Order – ஒன்று, விண்ணப்பதாரரின் Application மற்றும் ஆட்சேபனை மனு தொடர்பான ஆவணங்கள், Proposal Register–ஒன்று, நான் கொடுத்த ஆவணங்கள் அனைத்தும் மகஜரில் குறிப்பிடுப்பட்டுள்ளன. நான் கொடுத்த வேறு சில ஆவணங்கள் தற்போது ஞாபகமில்லை. லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. 09.11.2011 அன்று எனக்கு அலுவலக வேலை நேரம் எவ்வளவு என்றால் கள பணியாளர் என்பதால் குறிப்பிட்ட நேரம் என்று எதுவும் கிடையாது. 09.11.2011 அன்று இரவு 10.00 மணிக்கு நான் யார் சொல்லி அலுவலகத்திற்கு வந்தேன் என்றால் நான் எனது வீட்டின் அருகே இருந்த போது உதவி மின்பொறியாளர் மற்றும் விஜிலன்ஸ்

அதிகாரிகள் என்னை அழைத்ததன் பேரில் நான் அலுவலகம் வந்தேன். மேற்படி சங்கதியை விஜிலன்ஸ் போலிசார் என்னை விசாரித்தபோது நான் சொல்லியுள்ளேனா என்றால் அது போன்று என்னை எந்த கேள்வியும் விஜிலன்ஸ் போலிசார் கேட்கவில்லை. நான் எடுத்து கொடுத்த ஆவணங்களை அலுவலகத்தில் பராமரித்து வந்தது யார் என்றால் திரு.தனசேகரன் என்ற வணிக உதவியாளர்(Commercial Assistant) ஆவார்.

2. திரு.தனசேகரன் என்ற வணிக உதவியாளர்(Commercial Assistant) தனது பணிநேரம் முடிந்தவுடன் அவருக்கு என்று ஒதுக்கப்பட்ட பீரோவில் மேற்படி ஆவணங்களை வைத்து பூட்டிவிட்டு சென்று விடுவாரா என்றால் பீரோவில் வைத்து பூட்ட மாட்டார், திறந்துதான் இருக்கும். அந்த சமயத்தில் திரு.தனசேகரன் என்ற வணிக உதவியாளர்(Commercial Assistant) கீழடி பிரிவு அலுவலகத்தில் இருந்தாரா என்றால் இல்லை, நான் மட்டும்தான் இருந்தேன். திரு.தனசேகரன் என்ற வணிக உதவியாளர்(Commercial Assistant) அவரின் வீடு கீழடியில் எந்த இடத்தில் இருந்தார் என்றால் அங்கு இல்லை திருப்புவனத்தில் குடியிருந்தார்.

3. திருப்புவனம் என்பது மதுரை–இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். என் வீடு கீழடி

பிரிவு அலுவலகத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. மின் கம்பம் நடுவதற்கான தளவாட சாமான்கள், கீழடி அலுவலகம் உட்பட அந்த கோட்டத்திற்கு மானாமதுரை துணை பண்டக சாலையில் உள்ளது என்றால் சரிதான். அந்த பண்டக சாலையில் தளவாட பொருட்கள் பெறுவதற்கு உரிய Indent பெற்று அந்தந்த பகுதி இளம் பொறியாளர்களால் மானாமதுரை பண்டக சாலை சென்று எடுத்து வருவார்களா என்றால் அவர்கள் மற்ற அலுவலர்களுடன் சேர்ந்து எடுத்து வருவார்கள்.

4. என்னிடம் காட்டப்படும் **18.10.2011–ம் தேதிக்கான Requisition for Materials–ல் என்ற ஆவணத்தில் Messenger என்ற இடத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் வலது பக்கத்தில் கடைசியாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் மொத்தம் 16 எண்ணிக்கையுடையது. அது எ.த.சா.ஆ.1 (வரிசை)** ஆகும். மேற்படி ஆவணத்தின் உண்மைத்தன்மை மற்றும் ஆவணத்தில் உண்மைநகல் என்று அதிகாரியால் சான்றளிக்கப்படாததால் எ.த.சா.ஆ.1(வரிசை) கையொப்பங்கள் தெளிவாக தெரியாததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கிறார்.

5. **எ.த.சா.ஆ.1 ஆவணத்தில் 2, 3, 4, 5, 6, 7, 9, 10, 11 ,12, 14, 15, 16 மற்றும் 17 ஆகிய பக்கங்களில் Signature of Drawer மற்றும் Messenger with Designation என்ற இடத்தில் உள்ள கையொப்பங்கள் எதிரியுடைய கையொப்பம் ஆகும். மேற்படி கையொப்பங்கள் எ.த.சா.ஆ.2(வரிசை)** ஆகும். அதில் 1, 8, 13 வது பக்கங்களில் Messenger with Designation என்ற இடத்தில் உள்ள கையொப்பம் தெளிவாக தெரியவில்லை. மேற்படி **எ.த.சா.ஆ.1, 2 ஆவணங்கள் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பொது தகவல் அலுவலர் அவர்களால் 06.07.2016 அன்று வழங்கப்பட்ட கடிதம் மற்றும் 1 முதல் 17 பக்கங்கள் கொண்ட Requisition for Materials அடங்கிய கோப்பு எ.த.சா.ஆ.3** ஆகும். மேற்படி எ.த.சா.ஆ.2 (வரிசை) ஆவணத்தின் உண்மைத்தன்மை மற்றும் ஆவணத்தில் உண்மைநகல் என்று அதிகாரியால் சான்றளிக்கப்படாததால் எ.த.சா.ஆ.2 (வரிசை) கையொப்பங்கள் தெளிவாக தெரியாததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கிறார்.

6. 18.10.2011–ம் தேதி காலை 8.00 மணிக்கு கீழடி பிரிவு அலுவலகத்திலிருந்து நான், எதிரி மற்றும் 2 ஊழியர்களும் புறப்பட்டு

மானாமதுரை மின் உப பண்டக சாலைக்கு சென்று எ.த.சா.ஆ.3 கோப்பில் கண்ட Requisition for Materials என்ற ஆவணங்களை சமர்ப்பித்து தளவாட சாமான்களை மானாமதுரையில் பெற்று அன்று மாலை 5.00 மணிக்குதான் கீழடி மின் பிரிவு அலுவலகத்திற்கு வந்தோம் என்று சொன்னால் சரிதான்.

7. நான் ஒப்படைத்ததாக சொல்லும் ஆவணங்களோடு அ.த.சா.ஆ.19 கோப்பில் 5 வது பக்கத்தில் கண்டபடி திரு.குதாபக்ஸ் என்பவர் கொடுத்த ஆட்சேபனை மனுவும் அதற்கு எங்கள் அலுவலகத்திலிருந்து அவருக்கு கொடுத்த பதில் அ.த.சா.ஆ–19–ல் பக்கம் –3 லும் அதன் அலுவலக நகல் அ.த.சா.ஆ.19–ல் பக்கம்–1 லும் உள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.19–ல் பக்கம்–1–ல் உள்ள வாசகங்கள் அனைத்தும் என் கைப்பட நான் எழுதியதுதான். அந்த 1 வது பக்கத்தில் நான் எழுதிய Draft–ஐ வைத்துதான் 3 வது பக்கத்தில் உள்ள வாசகங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அத்தாட்சி மகஜர் அ.த.சா.ஆ.20–ல் உள்ள வாசகங்களை யார் எழுதியது என்றால் தெரியாது. அ.த.சா.ஆ.20–ல் உள்ள வாசகங்கள் அரசு சாட்சிகள் S.V.கோபால் மற்றும் S.சம்பத் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டதாகத்தான் உள்ளது என்றும் என் முன்னிலையில்

தயார் செய்யப்பட்டதாக அதில் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் அலுவலகத்தில் என் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. நான் காவல் ஆய்வாளருக்கு எடுத்துக் கொடுத்ததாக அ.த.சா.ஆ.20-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் எதுவும் அந்த தேதியில் என் பொறுப்பிலும், பாதுகாப்பிலும் இல்லை என்றும் அன்றைய தேதியில் நான் கீழடி பிரிவு மின் அலுவலகத்திற்கு என்னை அழைத்து நான் வரவும் இல்லை என்றும் அங்கு வைத்து என் முன்னிலையில் அ.த.சா.ஆ-20 அத்தாட்சி மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணங்களை கீழடி பிரிவு மின் அலுவலகத்திலிருந்து வேறு அலுவலர்கள் மூலம் சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு எடுத்து வரச் சொல்லி அத்தாட்சி மகஜர் தயார் செய்யப்பட்டது என்றும் என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு என்னை வரவைத்து அதில் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.02.07 13:31:17 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.